**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 18/2021**

2025ம் வருடம் ஜுலை திங்கள் 28ம் நாள் வாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு. V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு. ஜோதிமுத்து (PW1) கிராமம்:
தகப்பனார் பெயர் : கோவிந்தன் தொழில் :
வயது :

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் இவ்வழக்கின் வாதியாவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. 18.01.2021ம் தேதியிட்ட தாவா சொத்துக்கள் குறித்த வில்லங்க சான்று தமிழ்நாடு அரசு பதிவுத்துறை இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 12.12.2008 தேதியிட்ட தாவா சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கமுதி சார்-பதிவாளர் அலுவலகத்தில் ஏற்படுத்திக் கொடுத்த பத்திர எண்.689/2008 கொண்ட பதிவு செய்யப்பட்ட பொது அதிகார பத்திரம் சார்-பதிவாளர் அலுவலகத்திலிருந்து சான்றொப்பம் பெற்று பெறப்பட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 06.01.2009ம் தேதியிட்ட தாவா சொத்துக்களைப் பொறுத்து 1ம் பிரதிவாதியின் பகர அதிகாரம் பெற்ற முகவல் என்ற அடிப்படையில் 2ம் பிரதிவாதியானர் 3ம் பிரதிவாதிக்கு கமுதி சார்-பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி சொத்துக்களை ஆவண எண்.26/2009ன் கீழ் கிரையம் செய்து கொடுத்த கிரைய பத்திரத்தின் தமிழ்நாடு அரசு பதிவுத்துறை இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு

செய்யப்படுகிறது.

5. 19.01.2021ம் தேதியிட்ட தாவா சொத்துக்கள் உள்ளிட்ட வேறு நில சொத்துக்களுக்கும் 3ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக ஏற்பட்ட பட்டா இணைய தள நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ஒம்./-திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.